Sri M. PALANIYANDI : மத்திய அரசாங்க ஊழியர்களுக்கும், சென்னை அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள விகிதத்தில் வித்தியாசம் இருக்கிறது. அதேபோல கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் விஷயத்திலும், சென்னை ராஜ்யத்தில் கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் 300 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தால், இதே சம்பளத்தை கெஜட் பதிவில்லாதவர்களே மத்திய சர்க்காரிலுள்ளவர்கள் வாங்கிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட தாரதம்மியத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா? மேலும், இந்தியன் அட்மினிஸ்ட்ரேடிவ் ஸர்விஸ் உத்தியோகத்திற்கு நபர்களைத் தெரிந்தெடுக்கும்போது மாகாணத்திலிருந்து வருபவர்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும். திறமையின்படிதான தெரிந்தெடுக்கப்படுகிறதென்றாலும், மாகாணத்திலிருந்து வருபவர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டுமென்று நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : முதலிலே போட்ட கேள்வி இந்த மூல கேள்வியிலிருந்து எழவில்லை. இரண்டாவது, நான் சொன்ன வாதங்கள் எல்லாவற்றையும் கேட்டுத்தான் இப்பொழுது எந்த முறையில் இந்தியன் அட்மினிஸ்ட்ரேடிவ் சர்வீசுக்கும், இந்தியன் போலீஸ் சர்வீசுக்கும், மற்றும் அகில இந்திய சர்வீசுகளுக்கும் ஆட்களைப் பொறுக்கியெடுக்கவேண்டும் என்பதைப்பற்றி அவர்கள் கொள்கை நிர்ணயித்திருக்கிறார்கள். அதில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமென்றால், இப்பொழுது அதை யோசிப்பதற்கு சமயம் இல்லை.

Betting on New York Cotton Prices

* 133 Q.—**Sri A. RATNAM :** Will the Hon. Minister for Finance be pleased to state the number of persons arrested by the police for alleged betting on New York Cotton prices and the amount seized from them from January to May 1956 in—

(i) the Madras City and

(ii) in the State (rest of the State excluding the Madras City)?

The Hon. Sri C. SUBRAMANIAM :

Number of persons arrested.	Amount seized. RS.	A.	P.
(i) 1,794	6,132	1	3
(ii) 893	4,740	8	6

Sri V. R. KRISHNA AYYAR : May I know in the view of the Government who is better—the speculator who bets on cotton or the Government servants who bet on a game of rummy?

The Hon. Sri C. SUBRAMANIAM : I am not here to answer hypothetical questions. I suppose the hon. Member may decide it for himself who is better or who is worse.

Mr. SPEAKER : Questions Nos. 134 and 135 will be taken up together as they relate to the same subject.